**கூடுதல் சார்பு நீதிமன்றம். காஞ்சிபுரம்**

முன்னிலை : திரு.அ.முகம்மது அலி. பி.எஸ்சி., பி.எல்.,
கூடுதல் சார்பு நீதிபதி, காஞ்சிபுரம்.

2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 31–ம் நாள் வெள்ளிக் கிழமை

**அசல் வழக்கு எண். 220/2022**

**C.N.R.No.TNKP07000293-2022**

1. R.பச்சையம்மாள் (இறப்பு)

2.R.நேரு

3.R.லியோகாந்தி

(1ம் வாதியின் வாரிசுகளான 2 மற்றும் 3 வாதிகள்

இ.ம.எண்.8/25 நாள் 19.06.2025 படியாக சேர்க்கப்பட்டுள்ளனர்)

.......வாதிகள்

// எதிர்//

A.சத்தியவேல் .........பிரதிவாதி

இவ்வழக்கானது என் முன்பாக கடந்த 14.07.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. சௌந்தரபாண்டி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பிரேம்குமார் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வாதிகள் தரப்பு வழக்குரை, பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை, இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள், இரு தரப்பு எழுத்துப் பூர்வமான வாதுரைகள் இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

வாதிகள் தரப்பில் இவ்வழக்கானது 1ம் வாதியிடம் பிரதிவாதி 28.12.2017 தேதியிட்ட ஈடுகாட்டிய அடமான கடன்பத்திரம் படியாக கடந்த 25.12.2017 தேதியில் பெற்ற அசல் தொகை ரூ. 1,50,000/–மற்றும் 28.12.2017 தேதிகளில் பெற்ற அசல் தொகை ரூ.1,00,000/– மொத்த அசல் தொகை ரூ.2,50,000/– அதற்கான வட்டித் தொகை ரூ. 2,75,000/– ம் சேர்த்து மொத்தம் ரூ.5,25,000/– ம், மற்றும் மேற்படி அசல் தொகைக்கு வழக்கு தேதியிலிருந்து கடன் பைசல் ஆகும் வரை 24% ஆண்டு வட்டியும், மற்றும் வழக்கு செலவுத்தொகையினை வாதிகளுக்கு பிரதிவாதி செலுத்த வேண்டும் என்பதாக அடமான கடனுக்கான முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் வழங்கவும், தவறும் பட்சத்தில் அடமான சொத்தினை விற்று தாவா

தொகையினை பெற நடவடிக்கை கோரியும் மற்றும் செலவுத் தொகை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வழக்குரையின் சுருக்கம்**

வாதி தரப்பில் பிரதிவாதி 1ம் வாதியிடம் கடந்த 25.12.2017 அன்று ரூ.1,50,000/– மற்றும் 28.12.2017 தேதியில் ரூ.1,00,000/– குடும்ப செலவிற்காக பெற்றுக் கொண்டு சார் பதிவாளர் அலுவலகம், தாமல் அலுவலகத்தில் கடந்த 28.12.2017 அன்று பிரதிவாதி சொத்தினை அடமான பத்திரம் எழுதி கொடுத்துள்ளதாகவும், பிரதிவாதி சொத்தின் அசல் ஆவணத்தை வாதியிடம் ஒப்படைத்துள்ளதாகவும், பிரதிவாதி கடந்த 28.12.2017 அன்று எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமான கடன் பத்திரம் முன்னிலைக்கு 24% ஆண்டு வட்டி விகிதம் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளதாகவும், பிரதிவாதி 1ம் வாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட அடமான கடன் பத்திரம் முன்னிலைக்கு ஒப்புக்கொண்ட வட்டியை முறையாக செலுத்தவில்லை என்றும், பிரதிவாதியை 1ம் வாதி பலமுறை அணுகி அசல் மற்றும் வட்டி தொகையை செலுத்த கோரியும், பிரதிவாதி அசல் மற்றும் வட்டி தொகையை செலுத்தவில்லை என்றும், கடந்த 18.05.2022 அன்று 1ம் வாதி வழக்கறிஞர் மூலமாக முறையாக அறிவிப்பு ஒன்றினை கொடுத்தார் என்றும், அதனை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டதாகவும், எனவே பிரதிவாதி 1ம் வாதியிடம் 28.12.2017 தேதியிட்ட ஈடுகாட்டிய அடமான கடன்பத்திரம் படியாக கடந்த 25.12.2017 தேதியில் பெற்ற அசல் தொகை ரூ. 1,50,000/–மற்றும் 28.12.2017 தேதிகளில் பெற்ற அசல் தொகை ரூ.1,00,000/– மொத்த அசல் தொகை ரூ.2,50,000/– அதற்கான வட்டித் தொகை ரூ. 2,75,000/– ம் சேர்த்து மொத்தம் ரூ.5,25,000/– ம், மற்றும் மேற்படி அசல் தொகைக்கு வழக்கு தேதியிலிருந்து கடன் பைசல் ஆகும் வரை 24% ஆண்டு வட்டியும், மற்றும் வழக்கு செலவுத்தொகையினை 1ம் வாதிக்கு செலுத்த வேண்டும் என்பதாக முதல்நிலை தீர்ப்பாணை வழங்க கோரியும், தவறும் பட்சத்தில் அடமான சொத்தினை விற்று மேற்படி தொகையினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை கோரியும், மற்றும் செலவுத் தொகை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு நிலுவையில் இருந்தபோது 1ம் வாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளாக 2 மற்றும் 3 வாதிகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும், எனவே பிரதிவாதி வாதிகளுக்கு தாவா தொகை மற்றும் வட்டி தொகையினை வழக்கு செலவுத் தொகையுடன் செலுத்தவேண்டும் என்பதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

**2. எதிர்வழக்குரை சுருக்கம்.**

பிரதிவாதி தரப்பில் இந்த வழக்கானது சட்டப்படியும், நியாயத்தின்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேலும் வாதிகள் முற்றிலும் உண்மைக்கு

புறம்பான சங்கதிகளை கூறியும், வழக்கு மூலமே ஏற்படாமல் மேற்படி தாவாவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே மேற்படி வழக்கானது முதல் நோக்கு பார்வையிலேயே தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், இவ்வழக்கில் வாதியால் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானவை, உண்மைக்கு புறம்பானவை மற்றும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், தான் 1ம் வாதியிடம் கடந்த 25.12.2017 அன்று ரூ.1,50,000/– மற்றும் 28.12.2017 அன்று ரூ.1,00,000/– ஆகிய தொகைகளை தனித்தனியாக கடனாக பெற்றதாகவும், இவை இரண்டும் சேர்ந்து ரூ.2,50,000/– ஆகும் என்றும், இக்கடனுக்காக கடந்த 28.12.2017 அன்று தாமல் சப்–ரெஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் அடமான கடன் பத்திரம் ஒன்றை எழுதிக் கொடுத்ததாகவும், மேலும் வருடத்திற்கு 24% என்ற அடிப்படையில் 1ம் வாதி கேட்கும்போது அசல் மற்றும் அன்றைய தேதிக்கான வட்டியுடன் திருப்பி தருகிறேன் என்று ஒப்புக்கொண்டதாகவும், மேலும் பிரதிமாதம் 5ம் தேதிக்குள் வட்டி செலுத்தவும் ஒப்புக் கொண்டதாகவும், தான் கடந்த 06.01.2018 அன்று கடன் தொகையில் ரூ.1,50,000/– இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலை மூலம் (காசோலை எண்.537101) மூலம் செலுத்தி விட்டதாகவும், எனவே 06.01.2018க்கு பிறகு மீதமுள்ள ரூ.1,00,000/–க்கு வருடத்திற்கு 36% வீதம் மாதம் ரூ.3,000/– கடந்த 02.02.2020 வரை செலுத்தி வந்ததாகவும், 1ம் வாதி தன்னிடம் பூர்த்தி செய்யப்படாத 2 கடனுறுதி சீட்டு மற்றும் ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர், காஞ்சிபுரம் கிளை கணக்கின் 4 காசோலைகள் முறையே எண்.364147, 364150, 364151, 364152 ஆகிய பூர்த்தி செய்யப்படாத காசோலைகள் மற்றும் காசோலை எண்.537103 கொண்ட ரூ.66,000/– பூர்த்தி செய்யப்பட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலை ஒன்றையும் கொடுத்ததாகவும், பிரதிவாதி பெற்ற அசலையும், அதற்குண்டான வட்டியினையும் செலுத்தி விடுவதாகவும், எனவே கடனுக்கு ஈடாக அளித்த கடன் தொகைக்கான கடனுறுதி சீட்டுகள் மற்றும் காசோலைகளை திருப்பி தருமாறு 1ம் வாதியிடம் கேட்டபோது அவற்றை 1ம் வாதி தர மறுத்துவிட்டார் என்றும், அதனால் பிரதிவாதி மீதி தொகையினை செலுத்தவில்லை என்றும் வாதியிடம் பிரதிவாதி கொடுத்த அசல் பத்திரம் உள்ளதாகவும், வாதி பிரதிவாதிக்கு எந்த சட்ட அறிவிப்பும் அனுப்பவில்லை என்றும், தன் மீது 1ம் வாதி அடமான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதனை நீதிமன்றம் மூலம் பெறப்பட்ட அழைப்பாணை மூலமே தெரிந்து கொண்டதாகவும், மேலும் 1ம் வாதிக்கு பொது அதிகாரம் பெற்ற முகவரை நியமிக்க உரிமை உண்டு என்றும், ஆனால் 1ம் வாதி தனது மகனை இவ்வழக்கில் இந்த வழக்கிற்காக வழக்கை நேரில் நடத்தும் நபராக நியமிக்க முடியாது என்றும் 1ம் வாதி நன்றாக எழுத படிக்க தெரிந்தவர் என்றும், 1ம் வாதியே வழக்கை நேரில் நடத்தும் திறன் பெற்றவர் என்றும், மேலும் 1ம்

வாதிக்கும் தனக்கும் நடைபெற்ற பண பரிவர்த்தனை விவரங்கள் அனைத்தும் 1ம் வாதி மட்டுமே அறிவார் என்றும், அவருடைய முகவருக்கு அதனைப் பற்றிய விவரங்கள் எதுவும் அறியாதவர் என்றும், 1ம் வாதி தனது மகனை முகவராக நியமிப்பதற்கு தெளிவான காரணம் எதுவும் குறிப்பிடவில்லை என்றும், மேலும் 1ம் வாதியும் அவரது மகன் நேருவும் இதே நீதிமன்றத்தில் சுய வழக்காடியாகவும், முகவராகவும் பல வழக்குகளை நடத்தியுள்ளனர் என்றும், மேலும் மேற்படி நேரு என்பவர் நீதிமன்ற ஊழியராக பணியாற்றியவர் என்றும், தன்னை ஏமாற்றும் தீய நோக்கத்திலேயே நேரு முகவராக நியமிக்கப்பட்டார் என்றும், மேலும் 1ம் வாதி முறையற்ற பண பரிவர்த்தனைகள் மற்றும் சட்டத்திற்கு புறம்பான பண மோசடி வேலைகளிலும் ஈடுபட்டு வருகிறார் என்றும், தான் மீதமுள்ள அசல் தொகையான ரூ.1,00,000/—த்தை வட்டியுடன் கடந்த 02.02.2020 அன்று திருப்பி செலுத்த தயாராக உள்ளதாகவும், பிரதிவாதி தூய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடி உள்ளதாகவும் வாதியை ஏமாற்றும் எண்ணம் ஏதும் இல்லை என்றும், பிரதிவாதி தரப்பு ஆவணங்களை விசாரணையின்போது தாக்கல் செய்வதாகவும், எனவே வாதியின் இவ்வழக்கினை பிரதிவாதி செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

3.வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்கள் பரிசீலினை செய்து இந்நீதிமன்றத்தால் கடந்த 29.08.2024 தேதியில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது.

1.வாதி கோரியுள்ள சுவாதீன மீட்பு பரிகாரம் கிடைக்க கூடியதா?

2. வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் என்ன?

இவ்வழக்கில் 1ம் எழுவினா தவறாக வனையப்பட்டுள்ளதால் நீக்கம் செய்யப்பட்டு 31.07.2026 அன்று வனையப்பட்டுள்ள எழுவினா

1. வாதி கோரியுள்ள தாவா தொகை மற்றும் வட்டிக்கான முதல் நிலை தீர்ப்பாணை பரிகாரம் கிடைக்க கூடியதா?

**4.** வாதி தரப்பில் 2ம் வாதி நேரு வா.சா.1—ஆக விசாரிக்கப்பட்டு சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி சத்தியவேல் பி.சா.1—ஆக விசாரிக்கப்பட்டு சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதி தரப்பில் ஜெய்கிருஷ்ணன் என்பவர் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். அவரது சார்பாக ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. எழுவினா 1 க்கான தீர்வு**

1. வா.சா.1 சாட்சியத்தில் பிரதிவாதி 1ம் வாதியிடம் கடந்த 25.12.2017 அன்று ரூ.1,50,000/- மற்றும் 28.12.2017 தேதியில் ரூ.1,00,000/- வியாபார செலவிற்காக பெற்றுக் கொண்டு சார் பதிவாளர் அலுவலகம், தாமல் அலுவலகத்தில் கடந்த 28.12.2017 அன்று அடமான பத்திர முன்னிலைக்கு ஆவணம் எண்.1323/2017 பதிவு செய்யப்பட்டு ரூ.2,50,000/-க்கு 2% வட்டி என்ற ஓதாவில் பிரதிவாதி பதிவு செய்து கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1ன் படியாக பச்சையம்மாள் ஆதார் அடையாள அட்டையாக காணப்படுகிறது. வா.சா.ஆ.2ன் படியாக நேரு ஆதார் அடையாள அட்டையாக காணப்படுகிறது. வா.சா.ஆ.3ன் படியாக 28.12.2017 தேதியில் பச்சையம்மாள் என்பவருக்கு சத்தியவேல் என்பவர் எழுதிக் கொடுத்த ஈடு காட்டிய அடமான கடன் பத்திரம் ஆவண எண்.1323/2017 என்பதாக காணப்படுகிறது. அதன்படியாக பிரதிவாதி 07.10.2013 அன்று கிரையம் பெற்ற சொத்தினை தனது அவசர குடும்ப செலவிற்காக ரூ.1,50,000/- 25.12.2017 தேதியன்று ரொக்கமாகவும், ரூ.1,00,000/-ஐ இன்றைய தேதியில் ரொக்கமாகவும், மொத்தம் ரூ.2,50,000/- கடன் தொகையாக பெற்றுக்கொண்டு இன்று முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் வட்டி ரூ2/- வீதம் கூடும் வட்டி தொகையை ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் செலுத்திவிடுவதாக எழுதிக் கொடுத்துள்ள ஈடுகாட்டிய அடமான கடன் பத்திரம் என்பதாகவும், அதன்படியாக பெரும்பாக்கம் கிராம சர்வே எண்,54/4ல் மனை எண்.9சி யில் 860 சதுரடி கொண்ட காலி மனை பட்டா எண்.372 சொத்தினை அடமானம் செய்துள்ளதாக காணப்படுகிறது. வா.சா.ஆ.4ன் படியாக 07.10.2013 தேதியில் சத்தியவேல் என்பவர் சுசீலா பத்மநாபன் வகையறாக்களிடமிருந்து பெரும்பாக்கம் கிராம சர்வே எண்,54/4ல் மனை எண்.9சி யில் 860 சதுரடி கொண்ட காலி மனை பட்டா எண்.372 சொத்தினை ஆவண எண்.2098/2013 படியாக கிரையம் பெற்றுள்ளதாக காணப்படுகிறது. வா.சா.ஆ.7ன்படியாக 03.08.2022 தேதியில் வழக்கு சொத்து பொறுத்து பெறப்பட்டுள்ள வில்லங்க சான்று என்பதாகவும், அதன்படியாக வழக்கு சொத்து குறித்து பிரதிவாதி வாதிக்கு ஆவண எண்.1323/2017 படியாக ரூ.2,50,000/- ஈடு காட்டிய அடமானம் வைக்கப்பட்டுள்ளதாக பதிவாகி உள்ளதாக காணப்படுகிறது.

3. அதேசமயம் பி.சா.1 சாட்சியத்தில் தான் 1ம் வாதியிடம் கடந்த 25.12.2017 அன்று ரூ.1,50,000/- மற்றும் 28.12.2017 அன்று ரூ.1,00,000/- ஆகிய தொகைகளை தனித்தனியாக கடனாக பெற்றதாகவும், இவை இரண்டும் சேர்ந்து ரூ.2,50,000/- என்றும், இக்கடனுக்காக கடந்த 28.12.2017

அன்று தாமல் சப்–ரெஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் அடமான கடன் பத்திரம் ஒன்றை எழுதிக் கொடுத்ததாகவும், மேலும் வருடத்திற்கு 24% என்ற அடிப்படையில் 1ம் வாதி கேட்கும்போது அசல் மற்றும் அன்றைய தேதிக்கான வட்டியுடன் திருப்பி தருகிறேன் என்று ஒப்புக்கொண்டதாகவும், மேலும் பிரதிமாதம் 5ம் தேதிக்குள் வட்டி செலுத்தவும் ஒப்புக் கொண்டதாகவும், தான் கடந்த 06.01.2018 அன்று கடன் தொகையில் ரூ.1,50,000/– இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலை மூலம் (காசோலை எண்.537101) மூலம் செலுத்தி விட்டதாகவும், எனவே 06.01.2018க்கு பிறகு மீதமுள்ள ரூ.1,00,000/–க்கு வருடத்திற்கு 36% வீதம் மாதம் ரூ.3,000/– கடந்த 02.02.2020 வரை செலுத்தி வந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

4. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.1ன்படியாக 06.01.2018 தேதியில் வாதி பச்சையம்மாள் பெயரில் பிரதிவாதி ரூ.1,50,000/– இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காஞ்சிபுரம் கிளை காசோலை கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி காசோலையானது அன்றைய தேதியில் பணமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக காணப்படுகிறது. பி.சா.ஆ.2ன் படியாக பிரதிவாதி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி 01.01.2017 முதல் 31.12.2018 வரையான கணக்கு பட்டியல் படியாக 06.01.2018 தேதியில் வாதி பச்சசையம்மாள் ரூ.1,50,000/– பிரதிவாதி வங்கி கணக்கிலிருந்து பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக காணப்படுகிறது.

5. மேலும் வா.சா..1சாட்சியத்தில் பிரதிவாதி 1ம் வாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட அடமான கடன் பத்திரம் முன்னிலைக்கு கடந்த 28.12.2017 முதல் 28.07.2022 வரை வட்டி முறையாக செலுத்தவில்லை என்றும், மேலும் மே மாதம் 2022 முதல் வட்டி விகிதம் தொகையை செலுத்த தவறியதால் பிரதிவாதியை 1ம் வாதி பலமுறை அணுகி அதன் முன்னிலைக்கு தொகையை செலுத்தி விட வேண்டுமென்று தெரிவித்து அதன் காரணமாக கடந்த 18.05.2022 அன்று 1ம் வாதி வழக்கறிஞர் மூலமாக முறையாக அறிவிப்பு ஒன்றினை கொடுத்தார் என்றும், அதனை கடந்த 24.05.2022 அன்று பிரதிவாதி திருப்பி அனுப்பிவிட்டார் என்றும், இதுநாள் வரைக்கும், 1ம் வாதிக்கு எவ்வித பதிலறிவிப்பும் கொடுக்கவில்லை என்றும், எனவே பிரதிவாதி கடந்த 28.12.2017 தேதிட்ட அடமான கடன் பத்திரம் முன்னிலைக்கு தாவா தொகைக்கு கடந்த 2017 டிசம்பர் மாதம் முதல் 2022 ஜூலை மாதம் வரை வட்டி விகிதம் 24% சேர்த்து மொத்தம் ரூ.5,75,000/– மற்றும் பின் வட்டி தொகையினை வாதிகளுக்கு செலுத்தவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

6. மேலும் வா.சா.ஆ.5ன் படியாக 18.05.2022 தேதியில் வாதி பச்சையம்மாள் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பியுள்ள அறிவிப்பு என்பதாகவும், அதன்படியாக வாதிக்கு பிரதிவாதி அடமான கடன் தொகை

மற்றும் வட்டி சேர்த்து ரூ.5,13,167/-யும் 7 நாட்களுக்குள் செலுத்தவேண்டும் என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6ன் படியாக மேற்படி அறிவிப்பானது பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டுள்ளதாக காணப்படுகிறது.

7. அதேசமயம் பி.சா.1சாட்சியத்தில் 1ம் வாதி தன்னிடம் பூர்த்தி செய்யப்படாத 2 கடனுறுதி சீட்டு மற்றும் ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர், காஞ்சிபுரம் கிளை கணக்கின் 4 காசோலைகள் முறையே எண்.364147, 364150, 364151, 364152 ஆகிய பூர்த்தி செய்யப்படாத காசோலைகள் மற்றும் காசோலை எண்.537103 கொண்ட ரூ.66,000/- பூர்த்தி செய்யப்பட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலை ஒன்றையும் பெற்றுக் கொண்டதாகவும், தான் மீதம் இருக்கிற ரூ.1,00,000/- அசலையும், அதற்குண்டான வட்டியினையும் செலுத்தி விடுவதாகவும், எனவே கடனுக்கு ஈடாக அளித்த கடன் தொகைக்கான கடனுறுதி சீட்டுகள் மற்றும் காசோலைகளை திருப்பி தருமாறு 1ம் வாதியிடம் கேட்டபோது அவற்றை 1ம் வாதி தர மறுத்துவிட்டதாகவும், வாதி எந்த சட்ட அறிவிப்பும் அனுப்பவில்லை என்றும், தன் மீது 1ம் வாதி அடமான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதனை நீதிமன்றம் மூலம் பெறப்பட்ட அழைப்பாணை மூலமே தெரிந்து கொண்டதாகவும், தான் மீதமுள்ள அசல் தொகையான ரூ.1,00,000/-த்தை வட்டியுடன் கடந்த 02.02.2020 அன்று திருப்பி செலுத்த தயாராக இருந்ததாகவும், ஆனால் தன்னை மோசடி செய்து தன்னிடம் பணம் பறிக்க வேண்டும் என்கிற தீய எண்ணத்தில் 1ம் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

8. பி.சா.2 ஜெய்கிருஷ்ணன் சாட்சியத்தில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே உள்ள வழக்கு விபரங்கள் அனைத்தும் தனக்கு தெரியும் என்றும், கடந்த 28.12.2017ம் தேதி அன்று தாமல் சார் பதிவாளர் அலுவலகத்தில் வாதியிடமிருந்து பிரதிவாதி ரூ.2,50,000/- கடன் பெற்றுக் கொண்டதற்கு ஒரு ஈடு காட்டிய அடமான கடன் பத்திரம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றும் அந்த பத்திரத்தில் 2வது சாட்சியாக தான் கையெழுத்து செய்துள்ளதாகவும், பிரதிவாதியின் அசல் ஆவணங்களை வாதியானவர் பெற்றுக் கொண்டார் என்றும், பிரதிவாதி வாங்கிய ரூ.2,50,000/- கடனில் அடமானப் பத்திரம் எழுதிக் கொடுத்த பிறகு கடந்த 06.01.2018 தேதியில் ரூ.1,50,000/- இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் காசோலை எண்.537101 மூலமாக பிரதிவாதி வாதிக்கு கொடுத்துவிட்டார் என்றும், மேற்படி பணத்தை வாதி வங்கி மூலமாக பெற்றுக் கொண்டார் என்றும், அது பற்றி தனக்கு நன்றாக தெரியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

9.மேலும் வா.சா.1 குறுக்கு விசாரணையின்போது நான் தற்போது வழக்கறிஞராக பணிபுரிகிறேன். 2021 காலகட்டத்தில் நீதித்துறையில் சுருக்கு எழுத்தாக பணியாற்றினேன். இந்த வழக்கு என்னுடைய அம்மா தாக்கல்

செய்தார். பிரதிவாதி அடமானம் வைத்திருந்தார் அடமானத்திற்கு உண்டான பணத்தை திருப்பி கொடுக்கவில்லை ஆகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடமானத் தொகை ரூ.2,50,000/- ஆகும். வழக்கு ஆவணம் பற்றி உங்கள் அம்மாவுக்கு தான் தெரியும் உங்களுக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் எனக்கு நேரடியாக தெரியும். பணம் கொடுத்த காலகட்டத்தில் நீங்கள் எந்த ஊரில் பணி புரிந்தீர்கள் காஞ்சிபுரம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் பணிபுரிந்தேன். மேற்படி தொகை மட்டுமல்லாமல் வேறு ஏதேனும் பண பரிவர்த்தனை இருந்ததா என்றால் இருந்தது. என்ன பரிவர்த்தனை இருந்தது என்றால் முன்பாகவும் பின்பாகவும் பணத்தை பெற்றுள்ள அவர் கூறியபடி திரும்பவும் செலுத்தி உள்ளார். அவ்வாறு செலுத்தி விட்டதால் அந்த ஆவணங்கள் என்னிடம் இல்லை. கடன் அடமான பத்திரம் தவிர வேறு ஆவணங்கள் உங்களிடம் இருக்கிறதா என்றால் இல்லை. கடன் அடமான பத்திரம் கடந்த 28.12.2017 அன்று பதிவு செய்யப்பட்டது தாமல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. நான் சார்பதிவாளர் அலுவலகம் செல்லவில்லை கையொப்பமும் போடவில்லை. அடமானத் தொகை 25.12.2017 அன்று ரூ.1,50,000/- கொடுத்தார்கள் 28.12.2017 அன்று ரூ.1,00,000/- கொடுத்தார்கள். பணம் காலை சுமார் 9மணி அளவில் கொடுத்தார்கள். மேற்படி தொகை கொடுத்த பிறகு கடந்த 01.06.2018 அன்று பிரதிவாதி வாதிக்கு ரூ.1,50,000/- கொடுத்தார்கள் என்றால் தெரியும் அது வேறு ஒரு பரிவர்த்தனை ஆகும். அது காசோலையாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த காசோலை எண் 537101 என்றால் இருக்கலாம். அந்த காசோலை மாற்றி உங்கள் அம்மா பணம் எடுத்துக்கொண்டார் என்றால் எடுத்துக்கொண்டார். வாங்கிய கடன் ரூ.2,50,000/-ல் ரூ.1,50,000/- கொடுத்துவிட்டார் பாக்கி தொகை ரூ.1,00,000/- மட்டுமே கொடுக்க வேண்டும் என்றால் சரியில்லை. உங்கள் அம்மாவுக்கு தெரியாமல் நீங்கள் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினீர்கள் என்றால் சரியில்லை. பாக்கி உள்ள ரூ.1,00,000/-ற்கு உங்கள் தாயாரிடம் மாதம் தோறும் வட்டி ரூ.3,000/- கொடுத்து வந்தார் என்றால் சரியில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

10.மேலும் பி.சா.1 குறுக்கு விசாரணையின்போது நான் 10ம் வகுப்புவரை படித்துள்ளேன். 1ம் வாதி பச்சையம்மாளுக்கு எனக்கும் எத்தனை ஆண்டுகளாக கொடுக்கல் வாங்கல் பண பரிவர்த்தனை உள்ளது என்றால் வழக்கு பரிவர்த்தனை தவிர வேறு கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை. நான் வேறு நபர்களிடம் கடன் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. வங்கியில் தான் கடன் பெற்றுள்ளேன். நான் கொடுக்கல் வாங்கல் செய்யும் போது அதனை முறைப்படியாகத்தான் செய்வேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அடமான பத்திரமானது நான் 1ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த அடமான பத்திரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் 28.12.2017ல் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பி.சா.ஆ.1ன் படியாக 06.01.2018ல் 1ம் வாதிக்கு காசோலை மூலம் பணம் கொடுத்ததாக சொல்லி உள்ளதற்கு மேற்படி

வா.சா.ஆ.3ல் வரவு வைக்க 1ம் வாதியிடம் கேட்டேனா என்றால் நான் காசோலையாக கொடுத்ததால் அது பற்றி கேட்கவில்லை. அதன்பின்னிட்டு வாதியிடம் மேற்படி காசோலை தொகையை வா.சா.ஆ.3ல் வரவு வைக்க கேட்டேனா என்றால் இல்லை. நான் மாதம் ரூ.3,000/- வீதம் வட்டி பணமாக 1ம் வாதிக்கு மூன்றரை வருடங்களாக கொடுத்துள்ளேன். மேற்படி வட்டி பணம் கொடுத்தது சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் வாதி எனக்கு எதன் அடிப்படையில் பணம் கொடுத்தார் என்றால் நான் வேலை பார்த்த கடைக்கு 1ம் வாதி வந்து செல்வார். அதன் அடிப்படையில் பழக்கமானார். அவர் வட்டிக்கு பணம் கொடுப்பதாக தெரிவந்து நான்தான் வட்டிக்கு பணம் கேட்டேன். வா.சா.ஆ.3ல் குறிப்பிட்டுள்ள முகவரியில் நான் தற்போது வசித்து வருகிறேனா என்றால் அங்குதான் வசித்து வருகிறேன். வாதி தரப்பில் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு 18.05.2022 ல் வழங்கப்பட்டது என்றால் எனக்கு அறிவிப்பு வரவில்லை. எனக்கு நீதிமன்றத்தில் இவ்வழக்கு சம்மந்தமான அழைப்பாணை கிடைக்கப்பெற்று பின்னர் இவ்வழக்கில் ரூ.1,50,000/- காசோலை மூலமாக பணம் கொடுத்ததை பற்றி எதிர் கோரிக்கை கோரியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கும் 1ம் வாதிக்கும் நீண்ட கால பழக்கம் என்றும் அடிக்கடி கொடுக்கல் வாங்கல் உள்ளது என்றும், நான் காசோலையாக ரூ.1,50,000/- தொகை கொடுத்துள்ளதற்கும் இவ்வழக்கு தொகைக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் வாதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டதால் நான் வேறு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

11.மேலும் பி.சா.2 குறுக்கு விசாரணையின்போது பச்சையம்மாளிடமிருந்து சத்தியவேல் ரூ.2,50,000/- அடமான தொகை வாங்கினார். மேற்படி பணத்தை எப்படி கொடுத்தார்கள் என்றால் ரூ.1,50,000/- காசோலையாக கொடுத்தார்கள். மீதி தொகை எவ்வாறு கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி சத்தியவேல் வாதி பச்சையம்மாளுக்கும் கொடுக்கல் வாங்கல் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஒரு முறைதான் பணம் கொடுத்துள்ளார். ஆவணம் பதிவு செய்த அன்று சத்தியவேல் எவ்வளவு பணம் வாங்கினார் என்றால் ரூ-2,50,000/- பணம் வாங்கினார். அந்த பணம் வாங்கும்போது நான் உடன் இருந்தேன். எந்த இடத்தில் வைத்து பணம் கொடுக்கப்பட்டது என்றால் பச்சையம்மாள் வீட்டில் வைத்து பணம் கொடுக்கப்பட்டது. பதிவு செய்த நாள் மாலை 3-4 மணி இருக்கும். ஆவண பதிவு மதியம் 12 மணியளவில் நடந்தது. என்னை ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்வதற்காகத்தான் சத்தியவேல் அழைத்தார் என்றால் சரியல்ல. ஆரம்பத்தில் இருந்து அவருடன் தான் இருந்தேன். அடமான ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஆவண விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே பல பரிவர்த்தனைகள் உள்ளது என்றும் அந்த விவரங்கள் தெரியாமல் மேற்படி காசோலை பணமானது அடமானத்திற்கு கொடுத்ததாக தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

12.இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் பிரதிவாதி 1ம் வாதியிடம் கடந்த 25.12.2017 தேதியில் ரூ.1,50,000/– மற்றும் 28.12.2017 தேதியில் ரூ.1,00,000/– கடனாக பெற்றுக் கொண்டு மொத்த தொகை ரூ.2,50,000/–க்கு பிரதிவாதிக்கு சொந்தமான பெரும்பாக்கம் கிராமத்தில் உள்ள வீட்டு மனை சொத்தினை 1ம் வாதிக்கு அடமான ஆவணம் 28.12.2017 தேதியில் எழுதிக் கொடுத்து தாமல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி தொகைக்கு 24% ஆண்டு வட்டி தருவதாக 1ம் வாதிக்கு பிரதிவாதி ஒப்புக் கொண்டுள்ளதாகவும், அதன்படி அசல் மற்றும் வட்டி தொகையை கொடுக்கவில்லை என்பதால் 1ம் வாதி பிரதிவாதிக்கு 18.05.2022 அன்று அறிவிப்பு அனுப்பி அதனை பிரதிவாதி பெற்றுக் கொள்ளவில்லை என்றும், தாவா தொகையை 1ம் வாதிக்கு செலுத்தவில்லை என்பதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் வாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளாக 2 மற்றும் 3 வாதிகளுக்கு பிரதிவாதி தாவா தொகை ரூ.5,25,000/– மற்றும் அதற்கான பின் வட்டியும் செலுத்தவேண்டும் என்பதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

13.அதேசமயம் பிரதிவாதி தரப்பில் 1ம் வாதியிடம் 25.12.2017 தேதியில் ரூ.1,50,000/– மற்றும் 28.12.2017 தேதியில் ரூ.1,00,000/– கடனாக பெற்றுக் கொண்டு மொத்த தொகை ரூ.2,50,000/–க்கு பிரதிவாதிக்கு சொந்தமான பெரும்பாக்கம் கிராமத்தில் உள்ள வீட்டு மனை சொத்தினை 1ம் வாதிக்கு அடமான ஆவணம் 28.12.2017 தேதியில் எழுதிக் கொடுத்து தாமல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளதாகவும், மேற்படி தொகைக்கு 24% ஆண்டு வட்டி தருவதாக 1ம் வாதிக்கு பிரதிவாதி ஒப்புக் கொண்டுள்ளதாகவும், 1ம் வாதி அடமான கடனுக்காக பிரதிவாதியிடம் பூர்த்தி செய்யப்படாத கடனுறுதி சீட்டு–2, காசோலைகள் 4 மற்றும் ரூ.66,000/– பூர்த்தி செய்யப்பட்டுள்ள காசோலை–1 பெற்றுள்ளதாகவும், கடந்த 06.01.2018 அன்று பிரதிவாதி 1ம் வாதிக்கு வங்கி காசோலை எண்.537101 படியாக அசல் தொகை ரூ.1,50,000/–ஐ கொடுத்துவிட்டதாகவும், மீதி தொகை ரூ.1,00,000/–க்கு 06.01.2018 முதல் 02.02.2020 வரை மாதம் ரூ.3,000/– வீதம் 1ம் வாதிக்கு வட்டி கொடுத்துள்ளதாக குறிப்பிட்டு நிலையில் எனவே அசல் தொகை ரூ.1,00,000/– மற்றும் அதற்கு வட்டி தொகை 03.02.2020 முதல் செலுத்த தயாராக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

14.இவ்வழக்கில் கடந்த 28.12.2017 தேதியில் வா.சா.ஆ.3ன் படியாக ஈடு காட்டிய அடமான கடன் பத்திரம் 1ம் வாதிக்கு பிரதிவாதி கடன் தொகை ரூ.2,50,000/– எழுதி கொடுத்துள்ளதை பிரதிவாதி ஒப்புக் கொண்டுள்ளார். அதேசமயம் பி.சா.ஆ.1ன் படியாக 06.01.2018 தேதியில் பிரதிவாதி 1ம் வாதிக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காஞ்சிபுரம் கிளை வங்கி காசோலை எண்.537101 படியாக ரூ.1,50,000/– கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில், மேற்படி

காசோலை படியாக பி.சா.ஆ.2ன் படியாக பச்சையம்மாள் பிரதிவாதி வங்கியிலிருந்து ரூ.1,50,000/– பெற்றுக் கொண்டுள்ளதாக காணப்படும் நிலையில், வா.சா.1 குறுக்கு விசாரணையின்போது மேற்படி காசோலை படியாக 1ம் வாதி ரூ.1,50,000/– பிரதிவாதியிடம் பெற்றுக் கொண்டதாக ஒப்புக் கொண்டுள்ளார். அதேசமயம் வா.சா.1 குறுக்கு விசாரணையின் போது மேற்படி காசோலை படியாக 1ம் வாதி பெற்றுக் கொண்ட ரூ.1,50,000/–தொகையானது வேறு கொடுக்கல் கணக்கு சம்மந்தமானது என்பதாகவும், 1ம் வாதி பிரதிவாதியிடமிருந்து கடன் தொகைக்காக வேறு ஆவணங்கள் பெறவில்லை என்பதாக குறிப்பிட்டுள்ள நிலையில், பி.சா.1 குறுக்கு விசாரணையின் போது தனக்கும் 1ம் வாதிக்கும் வேறு கொடுக்கல் கணக்கு இல்லை என்பதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் பி.சா.2 சாட்சியத்தில் வா.சா.ஆ.3 அடமான கடன் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளதாகவும், அடமான கடனாக ரூ.2,50,000/– 1ம் வாதியிடம் பிரதிவாதி பெற்றதாகவும், பின்னிட்டு பிரதிவாதி 1ம் வாதிக்கு காசோலை மூலம் ரூ.1,50,000/– கொடுத்த போது தான் உடன் இருந்ததாக பி.சா.1க்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார்.

15. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் In T.Rajeshwari v. Dharmar, A.S..(MD) No.285 of 2021, decided on 31.03.2022, the Hon'ble Madras High Court upheld a preliminary mortgage decree and rejected the defendant's plea of repayment, holding that where repayment is alleged, the absence of endorsement in the mortgage deed and absence of documentary proof are fatal to the defence. The Hon'ble Court specifically observed that despite the defendant's contention that repayment had been made, no endorsement was found in the mortgage deed and no documentary evidence was produced except self–serving oral testimony. The Court held that such a defence cannot be accepted and confirmed the decree in favour of the mortgagee. என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அதன்படியாக பிரதிவாதி 1ம் வாதிக்கு அடமான கடன் தொகையில் ரூ.1,50,000/– திரும்ப செலுத்திவிட்டதாக குறிப்பிட்டுள்ள வாதம் ஏற்புடையதல்ல என்று வாதிடப்பட்டது.

16.இந்நிலையில் 1ம் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே வா.சா.ஆ.3ன் படியாக அடமான கடன் தவிர்த்து வேறு கொடுக்கல் கணக்கு இருந்து வந்ததாக ஆவணங்கள் எதுவும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் வாதிகள் தரப்பில் பிரதிவாதி 1ம் வாதிக்கு 06.01.2018 கொடுத்துள்ள ரூ.1,50,000/– தொகையானது அடமான கடனின் அசலினை பொறுத்து அடமான கடன் பத்திரத்தில் வரவு வைக்கப்படவில்லை என்பதாகவும், அதை பொறுத்து பிரதிவாதி சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்பதாக குறிப்பிட்டுள்ள நிலையில், மேற்படி தொகையானது பிரதிவாதியால் 1ம் வாதிக்கு வங்கி காசோலை மூலமாக கொடுக்கப்பட்டுள்ள நிலையில், வா.சா.ஆ.3 அடமான கடன் பத்திரம் அசல் 1ம் வாதி வசம் உள்ள நிலையில்

மேற்படி ஆவணத்தில் பிரதிவாதி பணம் செலுத்தியதாக வரவு தொகை குறிப்பிடப்படவில்லை என்று வாதிகள் தரப்பு வாதம் ஏற்புடையதாக இல்லை.

17.இந்நிலையில் வா.சா.ஆ.3ன் படியாக அடமான கடன் 28.12.2017ல் ஏற்பட்டுள்ள நிலையில், பி.சா.ஆ.1 மற்றும் 2ன் படியாக பிரதிவாதி 1ம் வாதிக்கு ரூ.1,50,000/– தொகையினை 06.01.2018 காசோலை படியாக கொடுத்துள்ள நிலையில், மேற்படி தொகையானது அடமான கடன் அசலுக்காக கொடுக்கப்பட்ட தொகை என்பதாக பிரதிவாதி குறிப்பிட்டுள்ள சாட்சியத்தை மறுக்கும் வகையில் வாதி தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் பிரதிவாதி 1ம் வாதிக்கு காசோலை மூலமாக ரூ.1,50,000/– அடமான கடன் தேதிக்கு பின்னிட்டு கொடுத்துள்ள நிலையில், வாதிகள் தரப்பில் மேற்கோளிடப்பட்டுள்ள மேற்படி முன் தீர்ப்பானது இவ்வழக்கின் பொருண்மைக்கு பொருந்துவதாக இல்லை என்பதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

இந்நிலையில் வாதி தரப்பில் வா.சா.ஆ.5ன் படியாக பிரதிவாதிக்கு அடமான கடன் தொகை ரூ.2,50,000/– மற்றும் வட்டியுடன் 1 வார காலத்திற்குள் செலுத்தவேண்டும் என்று அறிவிப்பு அனுப்பியுள்ள நிலையில் மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொள்ளவில்லை என்பதாக காணப்படுகிறது. இந்நிலையில் வா.சா.ஆ.5 அறிவிப்பு படியாக மட்டுமே 1ம் வாதிக்கு பிரதிவாதி தாவா அசல் கடன் தொகை ரூ.2,50,000/– செலுத்தவேண்டும் என்பதை நிரூபணம் செய்யக் கூடியதாக இல்லை. எனவே பிரதிவாதி 1ம் வாதிக்கு 06.01.2018 காசோலை படியாக கொடுத்துள்ள ரூ.1,50,000/– தொகையானது அடமான கடனின் அசலினை பொறுத்து திரும்ப கொடுத்த தொகை என்பதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. இந்நிலையில் வா.சா.ஆ.3ன் படியாக 28.12.2017 1ம் வாதியிடமிருந்து பிரதிவாதி பெற்றுள்ள அடமான கடன் ரூ.2,50,000/–ல் 06.01.2018 ல் அசல் தொகை ரூ.1,50,000/– செலுத்திவிட்ட நிலையில் மேற்படி அடமான கடன் தொகையில் அசல் தொகை ரூ.1,00,000/– மட்டுமே உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

18.மேலும் பிரதிவாதி தரப்பில் 1ம்வாதிக்கு பிரதிவாதி அசல் தொகை ரூ.1,00,000/– கடந்த 02.02.2020 வரை வட்டி தொகை செலுத்திவிட்டதாக குறிப்பிட்டுள்ளதை பொறுத்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில் 1ம் வாதிக்கு பிரதிவாதி அசல் தொகை ரூ.1,00,000/–ற்கு கடந்த 02.02.2020 வரை வட்டி தொகை செலுத்தி உள்ளதாக குறிப்பிட்டுள்ள சாட்சியம் ஏற்புடையதாக இல்லை.

19.இந்நிலையில் வா.சா.1 சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் 7ன் படியாக வா.சா.ஆ.3 அடமான கடன் பத்திரம் படியாக 1ம் வாதியிடம் பிரதிவாதி பெற்றுள்ள ரூ.2,50,000/– கடன் தொகையில் அசல் தொகையில்

ரூ.1,50,000/− செலுத்திவிட்டதாகவும், மீதமுள்ள அசல் தொகை ரூ.1,00,000/−ற்கு 1ம் வாதிக்கு பிரதிவாதி அசல் ரூ.1,00,000/ மற்றும் அசல் தொகைக்கு 24% ஆண்டு வட்டி தொகை அடமான ஆவண தேதியிலிருந்து வழக்கு தாக்கல் செய்த தேதி வரையிலும் மற்றும் வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதி வரை மேற்படி அசல் தொகைக்கு 12% ஆண்டு வட்டி மற்றும் இன்றைய தேதியிலிருந்து மேற்படி தொகையை செலுத்தும் வரை 6% ஆண்டு வட்டியும் 2 மாதத்திற்குள் செலுத்தவேண்டும் என்பதாக முதல் நிலை தீர்ப்பாணைக்கான 1ம் எழுவினா பகுதியாக வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு செய்யப்படுகிறது.

**6. எழுவினா 2ற்கான தீர்வு**

20. இவ்வழக்கில் எழுவினா 1ன் படியாக இவ்வழக்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கின் செலவுத் தொகையினை வாதிகளுக்கு பிரதிவாதி வழங்க வேண்டும் என்பதாக இந்த 2 ம் எழுவினா வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு செய்யப்படுகிறது.

இறுதியாக வாதிகளுக்கு பிரதிவாதி தாவா கடன் அசல் தொகை ரூ.1,00,000/−ம் மற்றும் மேற்படி அசல் தொகைக்கு 24% ஆண்டு வட்டி தொகை அடமான ஆவண தேதியிலிருந்து வழக்கு தாக்கல் செய்த தேதி வரையிலும் மற்றும் வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதி வரை அசல் தொகைக்கு 12% ஆண்டு வட்டி மற்றும் இன்றைய தேதியிலிருந்து மேற்படி தொகையை செலுத்தும் வரை6% ஆண்டு வட்டியும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகை 2 மாத காலத்திற்குள் செலுத்தவேண்டும் என்று முதல் நிலை தீர்ப்பாணை வழங்கியும், தவறும் பட்சத்தில் வாதிகள் அடமான சொத்தினை பொறுத்து இறுதிநிலை தீர்ப்பாணை நடவடிக்கை எடுத்துக் கொள்ள இவ்வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 31.07.2026 இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்./அ.முகமது அலி
கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.

1. வாதிகள் தரப்பு சாட்சிகள்:

1. வா.சா.–1 நேரு (2ம் வாதி)

2. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :

| வ. எண் | குறியீடு | தேதி | ஆவண விவரம் |
|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | -- | 1ம் வாதியின் ஆதார் அட்டை நகல் |
| 2 | வா.சா.ஆ.2 | -- | 2ம் வாதியின் ஆதார் அட்டை நகல் |
| 3 | வா.சா.ஆ.3 | 28.12.2017 | பிரதிவாதி 1ம் வாதிக்கு எழுதிக் கொடுத்த ஈடுகாட்டிய அடமான கடன் பத்திரம் அசல் |
| 4 | வா.சா.ஆ.4 | 07.10.2013 | பிரதிவாதி பெயரில் உள்ள வழக்கு அட்டவணை சொத்துக்கான கிரைய ஆவணம் நகல். |
| 5 | வா.சா.ஆ.5 | 18.05.2022 | 1ம் வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| 6 | வா.சா.ஆ.6 | 24.05.2022 | பிரதிவாதியால் திருப்பப்பட்ட அஞ்சலக உறை அசல் |
| 7 | வா.சா.ஆ.7 | 03.08.2022 | வழக்கு சொத்துக்கான வில்லங்க சான்றிதழ் கணிணி நகல். |

3. பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:

1. பி.சா.1 சத்தியவேல் (பிரதிவாதி)

2. பி.சா.2 ஜெய்கிருஷ்ணன்

4. பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :

| வ. எண் | குறியீடு | தேதி | ஆவண விவரம் |
|---|---|---|---|
| 1 | பி.சா.ஆ.1. | 06.01.2018 | 1ம் வாதிக்கு பிரதிவாதி கொடுத்த காசோலை வங்கி சான்றிட்ட நகல் |
| 2 | பி.சா.ஆ.2 | 16.08.2024 | 01.12.2017 முதல் 31.12.2018 வரையான பிரதிவாதி வங்கி கணக்கு விவர வங்கி கணிணி நகல். |

ஒம்./அ.முகமது அலி
கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.